# GST ROAD NEWS

Email:gstroadnews@gmail.com **CHROMPET** Weekly News Paper www.gstroadnews.com

Chrompet, Radha Nagar, Hasthinapuram, New Colony, Nehru Nagar

Vol:14 Issue-25 27 Sep 2026 -03 Oct 2026 4 Pages - Free Circulation Ct: 99628 80902



ANUJ HOMES
(BUILDING CONTRACTOR)
CHROMEPET
HOME CONSTRUCTION @Rs.2299/- Per sqft
INCLUDING
OHT & SEPTIC TANK, SUMP, ELEVATION WORK, ARCHITECTURAL DESIGN, ENGINEER SUPERVISION, BRANDED MATERIALS
Mob: 81481 11101 94446 54776

திருப்போரூர்-செங்கல்பட்டு ஹைவே
கருங்பாக்கம்
DTCP APPD மனைகள்
உங்கள் கனவு மனை வாங்க சிறந்த நேரம் இதுவே..!!
PER SQFT ₹1199/-
Title Clear documents
100% சட்டபூர்வமான தொடர் சான்றுகள்.
வளர்ச்சி அடையும் பகுதி உயர் மதிப்பு
MEGA OFFER LIMITED TIME ONLY!
7989271085

LUXURY FLATS @
Chromepet, Radha Nagar, Church Road Near GGN SCHOOL
Available Flats
2 BHK - 923, 950 Sq.ft.
Automatic Lift | CCTV | Covered Car Parking | Vasthu Complaint | Metro Water | Video Door Phone
Few flats only available
98404 94525

PREMIUM FLATS
FOR SALE @ CHROMPET
Maheshwari Nagar,
Near Shikshaa, NSN Vivekanandha Schools, Near Hasthinapuram Bus Stand
2 BHK 882 SQFT
3 BHK 1280 SQFT
NATARAJAN APARTMENT
LIFT | CCP | CCTV | EV CHARGING POINT | AS PER VASTHU | AUTOMATIC MOTOR | 100% RED BRICKS
GJ CONSTRUCTION
98409 41585

CHROMEPET AGS COLONY
FLATS FOR SALE
A PRIME LOCATION FOR A BRIGHTER TOMORROW
3 BHK
1010 SQ.FT
LIFT | CAR PARKING | CCTV SURVEILLANCE | METRO WATER & BOREWELL | CMDA APPROVED
ONE FLAT IN ONE FLOOR
30 FT ROAD | NEARBY PARK | NEAR TO BUSSTAND
Modern Living in a Prime Location
SBV CONSTRUCTION BUILDING BETTER LIVES
9566023817
SBV CONSTRUCTION
QUALITY | TRUST | YOUR DREAM HOME

3BHK INDEPENDENT DUPLEX HOUSE FOR SALE @ CHROMPET
YOUR DREAM HOME AWAITS
SITE ADDRESS : HASTHINAPURAM, SARASWATHI NAGAR, NR. THIRUMALAI NAGAR, ZION SCHOOL
3BHK AS PER VAASTHU | CCP | LOAN ARRANGED
MANIKAM CONSTRUCTIONS BUILDING YOUR DREAMS
OFFICE ADDRESS : PLOT NO : 37, 7TH MAIN ROAD, VINOBAJI NAGAR, HASTHINAPURAM CH-64
CALL : 94442 14382 / 94442 55004

IND. DUPLEX G+2 VILLA
NATARAJAN VILLA FOR SALE
@ SEMBAKKAM KARPAGAM AVENUE NR. SIVAN KOVIL
3BHK READY TO OCCUPY VILLA
VILLA 1: LAND AREA 975 SQFT | BUILT UP AREA 1700 SQFT
VILLA 2: LAND AREA 900 SQFT | BUILT UP AREA 2100 SQFT
CCP | AS PER VAASTHU | 100% RED BRICKS
98409 41585

SCS KINDERGARTEN SCHOOL
Play • Learn • Explore • Grow
Happy Dussehra!
May Knowledge Light Your Future!
Art & Creativity | Science Exploration | Social & Learning | Literacy & Numeracy | Physical Education | Bilingual Education
KNOWLEDGE | VALUES | BRIGHT FUTURE
Vijayadasami Admissions Open
Pre KG, LKG, UKG
MONTESSORI - 1, 2 & 3
Happy Children Brighter Tomorrow!
Small Steps Big Dreams!
9840879246, 044-22235761
#15 RANGANATHAN STREET, NEHRU NAGAR, CHROMPET, CHENNAI-44
Scan for Location
A Brighter Tomorrow Together!

RBN Kalai Koodam
ARTS | CULTURE | COMMUNITY
Tradition Builds Brighter Futures
LEARN PRESERVE PERFORM BELONG
CULTURE CONFIDENCE CREATIVITY COMMUNITY
NURTURING TALENT. ENRICHING LIVES.
ARTS CLASSES — TRADITIONAL ARTS FOR A BRIGHTER TOMORROW
Bharatanatyam — DISCIPLINE. EXPRESSION. TRADITION.
Carnatic Music — VOICE. VALUES. VIBRATION.
Art & Craft — CREATIVITY. CONFIDENCE. JOY.
Cultural Programs & Workshops — LEARN. PERFORM. GROW.
TUITION CENTRE — QUALITY EDUCATION FOR A BRIGHTER TOMORROW
TUITION FOR ALL CLASSES (KG TO 12)
ALL SUBJECTS
CBSE | STATE BOARD | MATRICULATION
EXPERIENCED FACULTY
INDIVIDUAL ATTENTION
REGULAR ASSESSMENTS
CONCEPT CLARITY
SUPPORTIVE LEARNING ENVIRONMENT
LEARN GROW SUCCEED
DISCIPLINE | CURIOSITY | CONFIDENCE | BRIGHTER TOMORROW
SMALL STEPS BIG FUTURES
9087909667 / 96000 03813
FOLLOW US ON INSTAGRAM rbn.kalaikoodam
ADMISSIONS OPEN ARTS & TUITION
ALL AGE GROUPS WELCOME
Balaji DM Towers, 39, Radha Nagar Main Rd, near Canara Bank, Lakshmi Nagar, Chromepet, Tambaram, Tamil Nadu 600044
TOGETHER FOR A BRIGHTER TOMORROW

PREMIUM 2 BHK FLATS FOR SALE @ CHROMEPET
NR RP ROAD, VIVEKANANDA & NSN SCHOOLS
BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
24 HRS POWER BACKUP*
2 BHK - 1028 Sqft
LIMITED UNITS BOOK NOW!
SPECIFICATION
With Lift
As Per Vaastu
CCP
CCTV
Video door Phone
EV Charger Point
Automatic Water Tank Leveller
Red Bricks Construction
INVITES LAND OWNERS FOR JOINT VENTURE OR OUT RATE
Sankar Constructions
BUILDING TRUST. CREATING HOMES.
9840939341
Project Approved by: LIC HFL | HDFC BANK | SBI

# பரிக்கல் லட்சுமி நரசிம்மர் பற்றிய 25 தகவல்கள்

1. நடுநாட்டு வைணவத் தலங்களில் பரிக்கல் தலம் தனித்துவம் கொண்டது.
2. பரிக்கல் ஆலய கருவறைக் குள் ஸ்ரீவியாசாரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீஆஞ்சநேயர் உள்ளார்.
3. உலகிலேயே இரட்டை ஆஞ் சநேயர் உள்ள ஒரே சன்னதி இந்த ஆலயத்தில் உள்ளது.
4. இத்தலத்து லட்சுமி நரசிம்மர் அனைத்து பிரிவு மக்களாலும் குல தெய்வமாக கொண் டாடப்படுகிறார்.
5. பரிக்கல் ரெயில் நிலையத் தில் இருந்து சுமார் அரை மைல் தொலைவில் இந்த ஆலயம் உள்ளது.
6. சென்னை திருச்சி நெடுஞ் சாலையில் கெடிலம் கூட்ரோட்டில் இருந்து இந்த ஆலயத்துக்கு செல்ல பஸ் வசதி உள்ளது.
7. விழுப்புரத்தில் இருந்து திருச்சி நோக்கி செல்லும் வழித்தடத்தில் சுமார் 21 கி.மீ. தொலைவுக்கு இத்தலம் உள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.
8. விழுப்புரத்தில் இருந்து இந்த ஆலயத்துக்கு வர காலை 2 தடவை, மதியம் 1 தடவை, மாலை 1 தடவை ஆகிய 4 தடவை மட்டுமே பஸ் வசதி உள்ளது.
9. கெடிலம் பகுதியில் இருந்து இத்தலத்துக்கு வர மினி பஸ், ஆட்டோ வசதி இருக்கிறது.
10. 1800 ஆண்டுகள் பழமை யான இத்தலம் மிகச் சிறந்த பிரார்த்தனை தலமாகும்.
11. பரிக்கல் தலத்தில் இருந்து பூவரசன் குப்பம் தலம் சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ளது.
12. இத்தலம் காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரைக்கும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரைக்கும் திறந்து இருக்கும்.
13. காலை 8 மணி முதல் 9 மணி வரை காலசாந்தி பூஜை, 11 மணி முதல் 12 மணி வரை உச்சிகால பூஜை, இரவு 7.30 மணி முதல் 8 மணி வரை ராக்கால பூஜை நடைபெறும்.
14. இத்தலத்தில் ரூ.10 கட்டணம் செலுத்தி சகஸ்ரநாமம் துர்ச்சனை செய்யலாம்.
15. இத்தலத்தில் வருடத்தில் 12 மாதங்களிலும் சிறப்பு



பூஜைகள் நடத்தப்படுகிறது. சித்திரையில் பிரம்மோற்சவம், வைகாசியில் நரசிம்ம ஜெயந்தி நடத்தப்படுகிறது.

16. ஆந்திராவைச் சேர்ந்த பலர் இத்தல நரசிம் மரை குல தெய்வமாகக் கொண்டாடு கிறார்கள். எனவே தெலுங்கு வருடப் பிறப்பு இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.
17. முதல் அமைச்சரின் அன்னதானத்திட்டம் இத்தலத்தில் செயல்படுத்தப்படுகிறது. தினமும் 50 பேருக்கு மதியம் அன்னதானம் வழங்கப்படுகிறது. பக்தர்கள் விரும்பினால் ரூ.1000 செலுத்தி ஒரு நாள் அன்னதானம் வழங்கலாம்.
18. இந்தியாவிலேயே இத்தலத்தில் மட்டுமே நரசிம்மரும் லட்சுமி தாயாரும் ஆலிங்கனம் செய்தபடி உள்ளனர்.
19. திருமண தடை இருப்பவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் இந்த ஆலயத்தில் வழிபட உடனடி பலன் கிடைக்கிறது.
20. நரசிம்மரிடம் வேண்டிக் கொண்டவர்கள் இத்தலத்தில் எண்ணை, பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம், எலுமிச்சை, மஞ் சள், சந்தனம் ஆகியவை மூலம் அபிஷேகம் செய்யலாம்.
21. இத்தலத்தில் செய்யப்படும் வழிபாடுகளால் நவக்கிரக தோஷங்கள் விலகும் என்பது ஐதீகம்.
22. முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களும் இத்தலத்துக்கு வந்து வழிபாடுகள் செய்வது குறிப்பிடத்தக்கது.
23. வரதராஜபெருமாள் தெற்கு நோக்கி உள்ளார். ஸ்ரீரங்கத்திலும் வரதராஜ பெருமாள் இதே அமைப்புடன்தான் உள்ளார்.
24. இத்தலத்தின் புராண கால பெயர் "பரகலா" என்பதாகும்.
25. ஒவ்வொரு மாதமும் சுவாதி நட்சத்திர தினத்தன்று மாலையில் சுவாமிக்கு சிறப்பு திருமஞ்சனம் நடத்தப்படுகிறது. பரிக்கல் ஸ்ரீலட்சுமி நரசிம்மர் திருவடிகளே சரணம்.

# மகாளய பட்சம்: முன்னோரை நினைத்துப் பாருங்கள்

வாழ்க்கையில் நம்மை நாமே உயர்த்திக் கொள்ள உதவும் வழிபாடுகளில் இந்த மகாளய பட்சம் வழிபாடுதான் முதன்மையானது. மிகவும் எளிதானது. ஆண்டுக்கு ஒரு தடவைதான் நமக்கு, இந்த வழிபாட்டுக்கான வாய்ப்பு கிடைக்கும். மகாளய பட்சம் வழிபாடு என்பது பித்ருக்களான மறைந்த நம் முன்னோர்களை நினைத்து வழிபட வேண்டிய ஒன்றாகும். நம்மை பெற்றவர்கள், தாத்தாக்கள், பாட்டிகள் மற்றும் இதர முன்னோர்கள் மறைந்த பிறகு அவர்கள் தெய்வத்துக்கு சமமாக மாறி விடுகிறார்கள். இந்த பிரபஞ்சத்தில் அவர்களுக்கு என்றே பித்ருலோகம் உள்ளது. மரணத்துக்கு பிறகு அங்கு சென்று விடும் நம் மூதாதையர்கள், பாவ புண்ணியத்துக்கு ஏற்ப அங்கிருந்து கொண்டு நமக்கு அருளாசி வழங்கி வருகிறார்கள். பொதுவாக பெற்றோர் மறைந்த பிறகு, பெரும்பாலானவர்கள் அவர்களை மறந்து விடுகிறார்கள். சிலர் 3வது நாள் விசேஷம், 16வது நாள் காரியம் என்று செய்த பிறகு கடமை முடிந்து விட்டதாக நினைக்கிறார்கள். பிறகு ஆண்டுக்கு ஒரு தடவை, அவர்கள் இறந்த நாளில், அவர்கள் விரும்பி சாப்பிடும் உணவை சமைத்து அவர்களுக்கு படையல் போட்டு கும்பிடுவார்கள். அப்புறம் ஆடி அமாவாசை, தை அமாவாசை நாட்களில் போட்டோவுக்கு மாலை போட்டு கும்பிட்டு விட்டு திருப்திப்பட்டுக் கொள்வார்கள். நாளடைவில் அந்த வழிபாடும் சுரத்து இல்லாமல் போய் விடுவதுண்டு. அதன்பிறகு அவர்களுக்கு முன்னோர் வழிபாடு என்பது ஏதோ வருடத்துக்கு ஒரு தடவை வரும் கோவில் கொடை விழா மாதிரி ஆகிவிடும். உயிரோடு இருந்த போது காணப்பட்ட பந்தம், பாசம் எல்லாம் காற்றில் கரைந்து காணாமலே போய் இருக்கும். சிலர் ஏதோ உறவே அத்து போய் விட்டது போல நடந்து கொள்வார்கள். ஆனால் கண்கண்ட தெய்வங்களான நம் முன்னோர்கள் நம்மை அப்படி விட்டு விடுவது இல்லை. ஆத்மாவாக இருந்து அவர்கள் தினம், தினம் நமக்கு அருளாசி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அவர்களை கும்பிட்டாலும் சரி, கும்பிடா விட்டாலும் சரி, நினைத்தாலும் சரி, நினைக்கா விட்டாலும் சரி, அவர்கள் உங்களுக்கு உதவிகள் செய்யத் தவறுவதே இல்லை. உங்களை, உங்கள் அருகில் இருந்து அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கர்ம வினைகளுக்கு ஏற்ப உங்களுக்கு நல்லது செய்கிறார்கள். உங்களுக்கு வரும் கெடுதல்களை அவர்கள்தான் தடுத்து நிறுத்துகிறார்கள். அந்த புண்ணிய ஆத்மாக்களின் இந்த புனித செயலால்தான், அவர்களது குடும்பம் இந்த பூ உலகில் தழைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறது. சுருக்கமாக சொல்ல வேண்டுமானால், ஒரு குடும்பத்தையும், அதை சார்ந்துள்ள குலத்தையும் காப்பது மறைந்த முன்னோர்கள்தான். நாம் கும்பிடாமலே நம் பித்ருக்கள் நமக்கு உதவிகள் செய்கிறார்கள் என்றால், நாம் அவர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து சிரார்த்தம் செய்து வணங்கினால் நம்மை எந்த அளவுக்கு அவர்கள் காப்பார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. யார் ஒருவர் தன் முன்னோருக்கு அமாவாசை தோறும்



தர்ப்பணம் கொடுக்கிறாரோ, அவரது குடும்பம் அமைதி பெற்று உயரிய நிலைக்கு சென்று கொண்டே இருக்கும். சாஸ்திர விதிப்படி ஒருவர், மறைந்த தன் மூதாதையர்களுக்கு ஆண்டுக்கு 96 நாட்கள் தர்ப்பணம் கொடுக்க வேண்டும். ஆனால் எல்லாராலும் 96 நாட்கள் தர்ப்பணம் செய்ய முடிவதில்லை. என்றாலும் முன்னோர்கள் இறந்த திதி நாளை கணக்கிட்டு பெரும்பாலானவர்கள் திதி கொடுத்து விடுகிறார்கள். அப்புறம் ஆடி அமாவாசை, தை அமாவாசையில் தவறாமல் தர்ப்பணம் செய்து விடுவார்கள். இப்படி எதுவுமே செய்யாமல், அதாவது திதி, தர்ப்பணம், சிரார்த்தம் என்று எதுவுமே செய்யாமல் கணிசமானவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் அத்தகையவர்களுக்காகவே மகாளய பட்சகாலம் உள்ளது. புரட்டாசி மாதம் பவுர்ணமிக்கு மறுநாள் தொடங்கி அமாவாசை வரையிலான 15 நாட்களே மகாளயபட்ச நாட்களாகும். ஆடி அமாவாசை, தை அமாவாசை மற்றும் மற்ற மாத அமாவாசை நாட்களை விட, இந்த மகாளய அமாவாசை மிக, மிக சிறப்பு வாய்ந்ததாகும். இன்னும் சொல்லப் போனால் எந்த அமாவாசையும் இதற்கு நிகரே கிடையாது. ஏன் தெரியுமா? மகாளய பட்சத்தின் 15 நாட்களும் பித்ருக்கள் அனைவரும் வான் உலகில் இருந்து, தம் குடும்பத்தாரைத் தேடி பூமிக்கு வந்து விடுவார்கள். இந்த 15 நாட்களும் அவர்கள் நம் வீட்டில்தான் இருப்பார்கள். நமக்கு சாப்பாடு தர மாட்டார்களா? தாகம் தீர தண்ணீர் தர மாட்டார்களா? நல்ல உடை தரமாட்டார்களா? என்று ஏக்கத்தோடு நம்மைப் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். நம்மை ஆசை, ஆசையாக வளர்த்து, நல்ல நிலைக்கு ஆளாக்கி விட்ட மறைந்த அந்த முன்னோர்களை நாம் அப்படி தவிக்க விடலாமா? அவர்களை பார்க்க வைத்து விட்டு, நாம் மட்டும் வகை, வகையாக சாப்பிட்டால், அது நியாயமா? இதுதான் பாவமாகவும், தோஷமாகவும் மாறிவிடும்.

இத்தகைய நிலை ஏற்பட விடலாமா? விடக் கூடாது. அதற்கு நாம் மகாளய பட்சம் 15 நாட்களும் மகாளய அமாவாசை தினத்தன்றும் கண்டிப்பாக மறைந்த நம் முன்னோர்களை நினைத்து வழிபட வேண்டும். உரிய நாளில், உரிய வகையில் தர்ப்பணம் கொடுக்க வேண்டும்.

முக்கியமாக மகளாய பட்ச நாளில் அத்தியாவசியப் பொருட்களை தானம் கொடுக்க வேண்டும். அன்னதானம் செய்ய வேண்டும். இந்த தான தர்மம் மூலம் மகிழ்ச்சி அடையும் உங்கள் முன்னோர்கள் மிகவும் திருப்தியுடன் உங்கள் வீட்டில் இருந்து பித்ருலோகத்துக்கு கிளம்பிச் செல்வார்கள். அவர்கள் மன நிறைவுடன் வாழ்த்த, வாழ்த்த உங்கள் வாழ்க்கையில் மேம்பாடு உண்டாகும்.

# புரட்டாசி மூன்றாம் சனிக்கிழமை வழிபாடு

புரட்டாசி மூன்றாம் சனிக்கிழமை வழிபாடு வீட்டில் பல வகையான சாதங்களை செய்து பெருமாளுக்கு விரதம் இருந்து தளிகை போட்டு வழிபாடு செய்பவர்களும் இருக்கிறார்கள். இந்த வழிபாட்டிற்கு எப்பொழு தும் போல் காலையில் எழுந்து குளித்து முடித்துவிட்டு வீட்டு பூஜை அறையை சுத்தம் செய்து கொள்ளுங்கள். பெருமாளின் படம் இருக்கும் பட்சத்தில் அந்த படத்தையும் சுத்தம் செய்து அவருக்கு துளசி மாலை சாற்றிக் கொள்ளுங்கள். அடுத்ததாக தளிகை போடுவதற்கு தேவையான பொருட்கள் புளிசாதம், எலுமிச்சை சாதம், சர்க்கரை பொங்கல், சுத்த அன்னம் (அதாவது பச்சரிசி சாதம் அதில் எதுவும் கலந்திருக்கக் கூடாது அதைத்தான் சுத்தானம் என்று கூறுவோம்) உளுந்து வடை மற்றும் பருப்பு வகைகள். புளி சாதத்தில் அதிகளவு காரம் சேர்க்கக்கூடாது என்பது குறிப்பிடத்தக்கது. உளுந்த வடையில் வெங்காயம், பூண்டு,



மிளகு என்று எதுவுமே சேர்த்திருக்கக் கூடாது என்பதும் குறிப்பிடத்தக்கது தான். பருப்பு வகைகள் என்று பார்க்கும் பொழுது பாதாம், பிஸ்தா, முந்திரி போன்ற போன்றவற்றை நாம் உபயோகப்படுத்தலாம். பலரும் வீட்டில் தளிகை போடும் பொழுது அவர்கள் சமைத்த உணவை வைத்து பெருமாளாக அலங்காரம் செய்து வழிபாடு செய்வார்கள். அப்படி செய்பவர்களாக இருக்கும் பட்சத்தில் இந்த சாதங்களை வைத்து பெருமாளாக உருவகப்படுத்திக் கொள்ளலாம். அப்படி உருவம் வைக்க மாட்டோம் என்பவர்கள் சாதாரணமாக ஒரு தலைவாழை இலையை போட்டு அதில் இந்த சாதங்களை வைத்து பெருமாளை வழிபாடு செய்யலாம். இந்த வழிபாட்டிற்கு கண்டிப் பாக முறையில் பெருமாளின் படம், சிலை இதை விட சங்கு சக்கர நாமம் வெள்ளியால் செய்யப்பட்டது இருந்தால் அது மிகவும் சிறப்பு. அப்படி வெள்ளியால் வாங்க இயலாது என்று நினைப்பவர்கள் பச்சரிசி மாவால் சங்கு சக்கரம் நாமம் இருப்பது போல் பூஜை அறையில் கோலம் போட்டுக் கொள்ள வேண்டும். கோலம் போடுவதற்கு முன்பாக பன்னீரை தெளித்து சுத்தம் செய்து அதற்கு மேல் கோலம் போட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வழிபாட்டிற்கு நமக்கு முக்கியமாக தேவைப்படுவது மூன்று மாவிளக்கு. பச்சரிசியை கழுவி சுத்தம் செய்து இடித்து அதனுடன் வெல்லம், நெய் கலந்து மாவிளக்காக தயார் செய்து நெய் ஊற்றி பஞ்சு திரி போட்டு தீபம் ஏற்ற வேண்டும். சங்கு சக்கர நாமம் கோலம் போட்டிருப்போம் அல்லவா அதற்கு துளசி இலைகளை பயன்படுத்தி பெருமாளின் 108 போற்றிகளை கூறி அர்ச்சனை செய்ய வேண்டும். ஒவ்வொரு முறையும் போற்றிகளை கூறும் பொழுது கடைசியாக கோவிந்தா கோவிந்தா என்று கூற வேண்டும். இப்படி அர்ச்சனை செய்து முடித்துவிட்டு கற்பூர தீப தூப ஆராதனை அனைத்தும் காட்டி வழிபாட்டை நிறைவு செய்து விட வேண்டும். பிறகு நாம் தளிகை போட்ட உணவிலிருந்து சிறிதளவு மட்டும் தனியாக நம் வீட்டில் இருப்பவர்கள் சாப்பிடுவதற்காக எடுத்து வைத்துவிட்டு மீதம் இருக்கும் சாதங்களை அந்தந்த சாதங்களுடன் கலந்து குறைந்தபட்சம் ஏழு நபர்களுக்கு இந்த கலவை சாதங்களை அன்னதானமாக வழங்க வேண்டும்.


# CLASSIFIEDS

## INDEPENDENT HOUSE

INDEPENDENT HOUSE FOR SALE @ CHENGALPET
1900 sqft.
Rs.2.00 Cr.
Near Market
9841141583

## PLOT SALE

PLOT FOR SALE
TAMBARAM 3600 SQFT
GUDUVANCHERY 3500 SQFT
NR MAIN ROAD
NORTH FACING
60 X 60 SQFT
CMDA APPROVED
BANK LOAN AVAILABLE
99620 03409

## BUYING & SELLING

வீட்டு மனை வாங்க விற்க
சோமங்கலம் | அமரம்பேடு
நல்லூர் | காட்டரம்பாக்கம்
கொளத்தூர்
9445550036

## FLAT RESALE

FLAT FOR RESALE @ CHROMPET
PURUSHOTHAM NAGAR
1 BHK | 550 SQFT | UDS - 300 SQFT
CALL - 80722 30451

## BUILDING CONTRACT

KR CONSTRUCTIONS
CONSTRUCTION
ARCHITECTURAL PLANS
APPROVALS
RENOVATION
LABOUR CONTRACT
80724 99969

FLAT FOR RESALE @ TAMBARAM, MUDICHUR
2 BHK
875 SQFT
UDS - 460 SQFT
LIFT
CAR PARKING
CALL - 80722 30451

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 525/- (Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999


## DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

## பிள்ளையாருக்கு எத்தனை தேவியர்?



ஸித்தி, புத்தி மற்றும் வல்லபை ஆகியோரை விநாயகரின் தேவியராகக் குறிப்பிடுகிறது விநாயக புராணம். இவர்கள் மட்டுமல்ல... மோதை, பிர போதை, கமலை, சுந்தரி, மனோரமை, மல்கலை, கேசினி, காந்தை, சாருகாசை, சுமந்தினை, நந்தினி, காமதை ஆகியோரும் விநாயகரின் தேவிகளாகத் திகழ்வதாக ஞானநூல்கள் தெரிவிக்கின்றன.


FOLLOW GST ROAD NEWS ON

வாங்க வேண்டுமா? விற்க வேண்டுமா?
FLAT & PLOT
BUYING / SELLING
பழைய & புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், வீடுகள், மனைகள், நல்ல விலைக்கு விற்பனை செய்தும், வாங்கியும் தரப்படும்.
Saravana Agencies
No 4/7A, Karumariamman koil 1st St., Padmanaban Nagar, Chrompet, Ch - 44
97890 52332


## இந்த வருஷம் மஹாளய பக்ஷ விவரம்

27.9.2026 ப்ரதமை ஞாயிற்றுக்கிழமை
28.9.026 த்விதியை திங்கட்கிழமை
29.9.2026 த்ருதியை செவ்வாய் கிழமை
30.9.2026 சதுர்த்தி புதன் கிழமை ( பரணி மஹாளயம்)
1.10.2026பஞ்சமி– ஷ்ஷ்டி வியாழன்
2.10.2026 சப்தமி வெள்ளிக்கிழமை
3.10.2026 அஷ்டமி சனிக்கிழமை
4.10.2026 நவமி ஞாயிற்றுக்கிழமை
5.10.2026 தசமி திங்கட்கிழமை
6.10.2026 ஏகாதசி செவ்வாய் கிழமை
7.10.2026 த்வாதசி புதன் கிழமை
8.10.2020 த்ரயோதசி வியாழக்கிழமை
9/.10.2026 சதுர்தசி வெள்ளிக்கிழமை
10.10.2026சனிக்கிழமை மஹாளய அமாவாசை

அனைவரும் மஹாளயபக்ஷத்தில் சிராத்தமோ அல்லது ஹிரண்யரூப சிராத்தமோ செய்து திலதர்ப்பணமும் செய்து *காருண்ய பித்ருக்களுடைய அனுக்ரஹத்தைப் பெற்று ஸகல ஸ்ரேயஸ் அடைய ப்ரார்த்திக்கிறேன். ஹரி ஓம்*


ஸ்ரீபிரசன்ன வெங்கடேசபெருமாள்


ஸ்ரீ அலமேலு மங்கை தாயார்


ஸ்ரீ லட்சுமி நரசிம்மர்


ஸ்ரீலட்சுமி ஹயக்ரீவர்


ஸ்ரீயோக ஆஞ்சநேயர்

குரோம்பேட்டை நேரு நகர் குமரன் குன்றம் ஸ்ரீ பிரசன்னயோக ஆஞ்சநேயர், பெருமாள் திருக்கோயிலில் புரட்டாசி இரண்டாவது வார சனிக்கிழமை முன்னிட்டு ஸ்ரீபிரசன்ன வெங்கடேசபெருமாள், ஸ்ரீ அலமேலு மங்கை தாயார், ஸ்ரீ லட்சுமி நரசிம்மர், ஸ்ரீலட்சுமி ஹயக்ரீவர், ஸ்ரீயோக ஆஞ்சநேயர் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்த போது எடுத்த படம்.

## இத்தாலி பள்ளிகளில் புர்கா அணிய தடை

இத்தாலியில் பள்ளிகளில் புர்கா மற்றும் நிகாப் அணிவதற்கு தடை விதிக்கும் சட்டம் நிறைவேற்றம். "பள்ளிகளில் புர்கா மற்றும் நிகாப் அணிவதற்கான தடை என்பது பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கை; ஒரு பெண் அல்லது ஒரு சிறுமி, தனது முகத்தை மறைக்க கட்டாயப் படுத்தப் படும்போது, அவரது அடிப்படை உரிமைகளும், ஒருங்கிணைப்பும் மறுக்கப் படுகின்றன." இத்தாலி பிரதமர் மெலோனி.

## ஆசிய போட்டியில் இந்திய கபடி அணிக்கு தங்கம்

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இன்று நடைபெற்ற மகளிர் கபாடி இறுதிப் போட்டியில் ஈரான் அணியை 37 34 என்ற கணக்கில் இந்திய அணி வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது.

## கண்களின் சோர்வை போக்கும் யோகா பயிற்சி

கணினியில் அதிக நேரம் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கு கண்களில் எரிச்சல், வலி போன்ற பிரச்சனைகள் ஏற்படும். அப்படிப்பட்டவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்த கண்களுக்கான யோகா பயிற்சியை தினமும் செய்து வந்தால் நல்லபலன் கிடைப்பதை காணலாம். நிமிர்ந்து நேராக உட்கார வேண்டும். வலது கையில் கட்டை விரலைத் தவிர மற்ற விரல்களை மடக்கி, பார்வைக்கு நேராக உயர்த்தி, கட்டைவிரலைப் பார்க்க வேண்டும். நம் பார்வை, கட்டை விரலில் நிலைத்திருக்க வேண்டும். கையை மெதுவாக வலப்புறம் நகர்த்த வேண்டும். கையைநகர்த்தும்போது, விழிகள் மட்டும் கையோடு சேர்ந்து நகர வேண்டும். தலையைத் திருப்பக் கூடாது. கழுத்து, முதுகு, நேராக இருப்பது அவசியம். கட்டை விரலைத் தெளிவாகப் பார்க்கக்கூடிய தூரம் வரை மட்டுமே கையை நகர்த்தவும். சிறிது நேரம் அப்படியே வைத்திருக்கவும். பிறகு, கையை அப்படியே பழைய நிலைக்குக் கொண்டுவரவும். இதை, ஐந்து முறை செய்ய வேண்டும். பயிற்சி செய்யும்போது, கண்களைச் சிமிட்டக் கூடாது.




இதேபோல கை பெருவிரலை இடது பக்கம் நகர்த்தி செய்ய வேண்டும். நேராக உட்கார்ந்து, மூக்கின் நுனியை உற்று நோக்கவும். கண்களோ, தலையோ வலிப்பது போன்று இருந்தால், கொஞ்சம் ஓய்வு எடுத்துவிட்டுத் தொடரலாம். பிறகு, கண்களை மூடி ஓய்வெடுக்கவும். நிமிர்ந்து உட்கார்ந்து கண்களை 10 முதல் 20 முறை சிமிட்டவும். பிறகு, கண்களைத் திறந்து நேராகப் பார்க்கவும். இடது கண் விழியை வலது பக்கமும், வலது கண் விழியை இடது பக்கமும் கொண்டுவந்து பயிற்சி செய்யவும். அதன் பிறகு, கைகளை தேய்த்து கண்களில் வைத்துக்கொள்ளவும். மீண்டும் 10 20 முறை கண்களைச் சிமிட்டவும்.

## மேயர் பிரியா வருத்தம்: என்ன செய்தாலும் பிரச்னையா?

ஏன் எனக்கு மட்டும் எப்போதும் இது நடக்கிறது? முதல் நாளிலிருந்து தற்போது வரை, நான் என்ன செய்தாலும் அது சர்ச்சையாகிறது. நான் பர்கர் சாப்பிட்டாலும் பிரச்னை.

முடி வெட்டிக் கொண்டாலும் பிரச்னை. நான் ஒரு பெண் என்பதாலோ அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவள் என்பதாலோதான் இப்படி நடக்கிறதோ என்று சில நேரங்களில் எனக்குத் தோன்றுகிறது.

## திருச்செந்தூரில் திடீரென 100 அடி உள்வாங்கிய கடல்

திருச்செந்தூர் முருகன் கோயில் முன்பு கடல் திடீரென சுமார் 100 அடி உள்வாங்கியதால், பாறைகள் அதிகளவில் வெளியே தெரிந்தன. கோயில் முன்புள்ள நாழிக்கிணறு பகுதியில் இருந்து அய்யா கோயில் வரை சுமார் 500 மீட்டர் நீளத்திற்கு கடல் உள்வாங்கியது. இதனால் பச்சை நிற பாசி படிந்த பாறைகள் அதிகளவில் வெளியே தெரிந்தன. கோயிலுக்கு வந்த பக்தர்கள் அந்த பாறைகள் மீது நின்று புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தனர். சிலர் பாறைகள் அருகே அமர்ந்து நீராடியும் மகிழ்ந்தனர்.

பௌர்ணமி தோறும் கடல் உள்வாங்குகிறது

## அரசு பள்ளி மாணவிக்கு பாலியல் வன்முறை குற்றவாளி கைது

சென்னை தாம்பரம் அருகே அரசுப் பள்ளி மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த முத்துசாமி (22) என்பவர் போக்சோவில் கைது.செய்யப்பட்டார்

17 வயது சிறுமியிடம் இன்ஸ்டாகிராம் மூலம் பழகி, ஆசை வார்த்தை கூறி இந்த கொடூரச் சம்பவத்தைச் செய்துள்ளதாக சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

WANTED PART TIME JOB
OFFICE WORK - MALE / FEMALE
+2 OR ANY DEGREE
TIMING : 2.30 PM - 6.30 PM
COLLEGE GOERS CAN ALSO APPLY
No : 4/7 A, PADMANABHA NAGAR , KARUMARIAMMAM KOVIL FIRST ST, CHROMPET , CH - 44
89396 05794

## AI 100 கோடி மக்களை கொல்லும்... பில் கேட்ஸ் அதிர்ச்சி!

"தவறானவர்களின் கைகளில் AI சிக்கினால், அது 100 கோடி மக்களைக் கொல்லும் அளவுக்கு சக்தி வாய்ந்ததாக மாறும்" என MICROSOFT இணை நிறுவனர் பில் கேட்ஸ் எச்சரிக்கை! "மிகவும் சக்தி வாய்ந்த ஆபத்தான ஆயுதமாக AI மாறியுள்ளது; AI நிறுவனங்களின் சுயகட்டுப்பாடுகள் மட்டும் போதாது, அரசுகளும் இதில் தலையிட்டு கடுமையான விதிகளை உருவாக்க வேண்டும்" என வலியுறுத்துகிறார் பில் கேட்ஸ்.

## சட்டசபையில் நடிக்கும் விஜய்

சட்டசபையில் சபாநாயகர் ஆக்ஷன் சொன்னால் விஜய் நடிக்க ஆரம்பித்து விடுகிறார். அனைத்துக் கட்சி தலைவர்களின் வீடுகளுக்கும் சென்று முதல்வரே சோபா டெலிவரி செய்தார் என்று தாராபுரத்தில் உதயநிதி பிரச்சாரம் செய்தார்.

WANTED
WELFARE OFFICER
at CHENNAI
Qualification: BSW / MSW
Experience: 2 YEARS
APPLY TO
mythily@idealfasteener.com

On-Line Also. Age No Bar
SPOKEN HINDI
PARICHAYA TO PRAVEEN
HINDI - ALL SYLLABUS
87545 19519 98418 19519

ஆட்கள் தேவை
சிட்லப்பாக்கத்தில் உள்ள பள்ளிக்கு ஆயம்மா தேவை
வேலை நேரம்: காலை 8 மணி முதல் மாலை 5.30 மணி வரை
98402 72483

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES, EXSERVICE MAN
AGE - 26 - 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

VARUN'S PLACEMENT
WE ARRANGE EXP
COOKS
PATIENT CARETAKER
BABY CARE
- (24 HOUR & PART TIME)
97905 76072 / 89255 24258

We Are Hiring
Open Position
SiteEngineer
(Civil/Electronics/Telecom) 0-2 years
Location-Across South India
Accountant(Tally)-Freshers
Female only
Location-Chrompet Office
Apply Here
RAJINISH CONSTRUCTIONS & TUKINCORP PVT. LTD.
rcoffice0606@gmail.com
9361836250

## பல நோய்களை போக்கும் சின்ன வெங்காயம்!



சாம்பார் வெங்காயம் என பரவலாக அழைக்கப்படும் ஒன்றுதான் சின்ன வெங்காயம். பெரிய வெங்காயத்தை ஒப்பிடும்போது இது உருவத்தில் சிறிதாக இருப்பதால் இதற்கு சின்ன வெங்காயம் என பெயர் வந்துவிட்டது. சின்ன வெங்காயத்தை உரிப்பது நேரம் எடுக்கும் என்பதாலும் அதை உறிக்கும் போது கண்ணில் நீரை வரவழைக்கும் என்பதாலும் இப்போதெல்லாம் பெரும்பாலான பெண்கள் பெரிய வெங்காயத்தையே சமையலில் பயன்படுத்த தொடங்கி விட்டனர். ஆனால் சின்ன வெங்காயத்தில் இருக்கும் சத்துக்களை பற்றி பலரும் அறிவதில்லை. ஜலதோஷம், இதய நோய் பிரச்சனை இருப்பவர்கள், சின்ன வெங்காயத்தை மென்று சாப்பிட்டு வெந்நீர் குடித்தால் ஜலதோஷம் குறைவதோடு தும்மலும் நின்றுவிடும். சின்ன வெங்காயத்தை பொடிப்பொடியாக நறுக்கி நல்லெண்ணெய் விட்டு வதக்கி சாப்பிட்டால் ரத்த கொதிப்பு குறைவதோடு இதயமும் பலமாகும். இதய நோய் மற்றும் மாரடைப்பு உள்ளவர்கள் சின்ன வெங்காயத்தை சாப்பிட வேண்டும்.

அதேபோல் மூலநோயால் அவதிப்படுபவர்களுக்கும் சின்ன வெங்காயம் ஒரு அருமருந்து. மேலும் பொடுகு தொல்லை, முடி கொட்டுதல் வழுக்கை போன்ற பிரச்சனைகளும் சின்ன வெங்காயம் நல்ல மருந்தாக இருக்கிறது. வழுக்கை விழுந்த இடங்களில் சின்ன வெங்காயத்தை தேய்ப்பதன் மூலம் முடி வளரவும் வாய்ப்பிருக்கிறது.

தேள் கொட்டிய இடத்தில் சின்ன வெங்காயம் சாறை தேய்த்தால் உடலில் விஷம் ஏறாது. மேலும் சின்ன வெங்காயத்துடன் சிறிது வெல்லத்தை சார்ந்து சாப்பிடும் பொழுது பித்தம் குறையும். தலைவலி பிரச்சினை இருப்பவர்கள் வெங்காய நெடியினை சுவாசித்தால் நிவார ணம் கிடைக்கும்.

அதேபோல் உடல் உஷ்ணத்தால் ஏற்படும் ஆசன கடுப்பு, மூல பிரச்சினைகளும் நீங்கும்.., குறிப்பாக சின்ன வெங்காயத்தில் இன்சுலின் சத்துக்கள் அதிகமாக உள்ளதால் நீரிழிவு நோயாளிகள் சின்ன வெங்காயத்தை தவறாமல் சாப்பிட வேண்டும்.. சின்ன வெங்காயத்தை சாறு எடுத்து உண்பதால் உடல் உள்ள கொழுப்புகள் கரையும். தொடர்ந்து 48 நாட்கள் சின்ன வெங்காயத்தை சாப்பிடும் போது உடல் குளிர்ச்சியடையும். மூளைக்கும் புத்துணர்ச்சி கிடைக்கும்.

## வெண்டைக்காய் மோர் குழம்பு



தேவையான பொருட்கள்:
வெண்டைக்காய் 13
ஓரளவு புளிப்பு உள்ள மோர் 500 மில்லி
காய்ந்த மிளகாய் 2
தேங்காய்த் துருவல் ஒரு சிறிய கப்
மிளகு, தனியா தலா ஒரு தேக்கரண்டி
கடலைப்பருப்பு, கடுகு தலா ஒரு தேக்கரண்டி
வெந்தயம் தலா ஒரு தேக்கரண்டி
எண்ணெய், உப்பு தேவையான அளவு.

செய்முறை:

வெண்டைக்காயை துண்டுகளாக நறுக்கி, எண்ணெய் விட்டு பொன்னிறமாக வதக்கவும். வாணலியில் சிறிதளவு வெண்டைக்காயை நீள துண்டுகளாக நறுக்கி, எண்ணெய் விட்டு பொன்னிறமாக வதக்கவும். வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு காய்ந்த மிளகாய், மிளகு, தனியா, கடலைப்பருப்பு ஆகியவற்றை வறுக்கவும்.

எண்ணெய் விட்டு காய்ந்த மிளகாய், மிளகு, தனியா, கடலைப்பருப்பு ஆகியவற்றை வறுக்கவும். இதனுடன் தேங்காய்த் துருவல் சேர்த்து, சிறிதளவு தண்ணீர் விட்டு மிக்ஸியில் விழுதாக அரைத்து, மோருடன் கலந்து தேவையான உப்பு சேர்க்கவும். வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு கடுகு, வெந்தயம் தாளித்து, மோர் கலவையை ஊற்றி, வதக்கிய வெண்டைக்காயும் சேர்த்து சிறிது நேரம் கொதிக்கவிட்டு இறக்கவும். சூப்பரான வெண்டைக்காய் மோர்க்குழம்பு தயார்.

## வீடுகளில் ஆபிஸ் நடத்தினால் சீல் வைக்க உத்தரவு

குடியிருப்புப் பகுதியில் வணிக நடவடிக்கை மேற்கொண்டால் கட்டடங்களுக்குசீல்வைகப்படும்என்று உச்சநீதிமன்றம்.எச்சரித்தது

விதிகளை மீறி வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் சம்பந்தப் பட்ட கட்டடங்களுக்கு சீல் வைக்கப்படும். விதிமீறல்களுக்கு எதிராக பாரபட்சமான முறையில் அதிகாரிகள் நடந்து கொண்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கூறினர்.

## வங்கிகள் இன்று செயல்படும்

செப்.27 ஞாயிற்றுக்கிழமை அன்று வழக்கம்போல SBI வங்கிக் கிளைகள் செயல்படும் என தெரிவித்து வாடிக்கையாளர்களுக்கு SBI வங்கி குறுஞ்செய்தி வெளியாகியுள்ளது. பொதுத்துறை வங்கி ஊழியர்கள் செப்.28 முதல் 30 வரை வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தவுள்ளதால், இன்று (செப்.27) வங்கிகள் இயங்கும் என நிதியமைச்சகம் அறிவித்திருந்தது.

## 23 ஆயிரம் விநாயகர் கண்காட்சி எஸ்.சி.எஸ் பள்ளி மாணவ மாணவிகள் கண்டு களிப்பு.



சிட்லபாக்கம் காந்தி தெருவில் உள்ள ஸ்ரீ லட்சுமி ராம் கணேஷ் மஹாலில் 23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள் கண்காட்சி நடந்தது. இந்நிகழ்வில் குரோம்பேட்டை நேரு நகர் எஸ்.சி.எஸ்.கிண்டர்கார்டன் மழலையர் பள்ளி மாணவமாணவிகள் கண்டுகளித்தனர். அப்பொழுது விநாயகர் பாடல்களை மனம் உருக பாடி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தனர் விநாயகா குழும தலைவர் சீனிவாசன் எஸ்.சி.எஸ். பள்ளி தாளாளர் கிரிஷ் சந்தானத்திற்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார். நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு விநாயகர் கண்காட்சி கண்டு ரசித்தனர்.

## தவெக வேட்பாளருக்கு எதிர்ப்பு பல்லாவரம் எம் .எல். ஏ .வீடியோ வைரல்



மதுராந்தகம் இடைத் தேர்தலில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் போட்டியிடும் மரகதம் குமரவேலுவை அழைத்துக் கொண்டு ஊருக்குள் வர வேண்டாம் என தொகுதி மக்கள் கூறுவதாக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. காமாட்சி தனது மனக்குமுறலை தொலைபேசி மூலம் கூறும் வீடியோ காட்சி சமூக வலைதளத்தில் ஒளிபரப்பாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## "விஜய்க்கு திமுக வேட்பாளர் அதிரடி கேள்வி

மதுராந்தகம் திமுக வேட்பாளர் பரந்தாமன் அளித்த பேட்டியில் பாலியல் குற்றச் சாட்டுகளில் உங்க கட்சிக் காரர்கள்தான் அதிகமாக ஈடுபட்டு இருக்கிறார்கள். என்னமோ பெண்களுக்கு அக்கறையா பேசுகிறீர்களே, விஜய் சார்.. நீங்க வழக்குப் போட்ட அப்போ உங்க வீட்டம்மாவை உங்க கட்சிக் காரர்கள் அவதூறாகப் பேசினார்கள்.

அதைத் தட்டிக் கேட்க உங்களால் முடியல. தமிழ்நாட்டுப் பெண்களின் பாதுகாப்பு குறித்து கேக்குறீங்க? எழுதிக் கொடுக்கும் ஸ்கிரிப்டை அப்படியே வாந்தி எடுக்கா தீங்க யோசித்து பேசுங்க.." என்றார்

## மின்சார ரயில் சேவையில் மாற்றம்

சென்னை எழும்பூர்விழுப் புரம் வழித்தடத்தில் உள்ள கிண்டி ரெயில் நிலையத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் வருகிற அக்டோபர் 4ந்தேதி வரையில் நள்ளிரவு 12.15 மணி முதல் அதிகாலை 2.45 மணி வரையில் (2 மணி நேரம் 30 நிமிடம்) பராமரிப்பு பணி நடைபெற இருப்பதால் ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## த.வெ.க.துணைப் பொதுச்செயலாளராக சந்தீப் ஆனந்த் நியமனம்



திமுக எம்.பி ஜெகத்ரட்சகன் மகன் சந்தீப் ஆனந்த் த.வெ.க.வில் இணைந்த நிலையில், அவருக்கு துணைப் பொதுச்செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.கடந்த ஜூலையில் முதல்வர் விஜய் முன்னிலையில் த.வெ.க.வில் இணைந்த நிலையில், மாநில துணைப் பொதுச்செயலாளர் களில் ஒருவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## ஓய்வூதியம் பெற்று வரும் விடுபட்ட பயனாளிகள் அரசு உதவி பெற சிறப்பு முகாம்




தாம்பரம் வட்டத்திற்கு உட்பட்ட கிராமங்களில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஓய்வூதியம் பெற்று வரும் பயனாளிகளில் விடுபட்ட பயனாளிகள் வருகின்ற 28, 29,30 ஆம் தேதிகளில்(திங்கள் முதல் புதன் ) வரை தாம்பரம் தனி வட்டாட்சியர் சமூகபாதுகாப்பு திட்ட அலுவலகத்தில் சிறப்பு முகாம் மூலம் தபால் வங்கி கணக்கு துவங்கி (போஸ்ட் ஆபீஸ் ) பயனாளிகளுக்கு தொடர்ந்து உதவித்தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே விடுபட்ட பயனாளிகள் மேற்படி அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் வரும் பொழுது மேற்கண்ட ஆவணங்களை அலுவலகத்திற்கு கொண்டு வர வேண்டியது 1. ஆதார் அட்டை 2. வாக்காளர் அட்டை 3. குடும்ப அட்டை 4. பான் கார்டு. கட்டாயமாக ஆதார் அட்டையும் வாக்காளர் அடையாள அட்டையும் அவசியம் கொண்டு வர வேண்டும். பொதுமக்கள் ஏதேனும் சந்தேகம் இருப்பின் அருகில் உள்ள கிராம நிர்வாக அலுவலரை தொடர்பு கொள்ளவும். என்று தாம்பரம் சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் அறிவித்துள்ளார்.













Published by K.MURUGANANTHAM ADITYAN Plot No: 4/7 A,Padmanaban Nagar, Karumariamman Kovil 1st Street,Chrompet -600 044. Printed by him B.Ashokkumar at Rathna Offset Printers,No.40,Peter's Road,Royapettah,Ch-14.Editor K.MURUGANANTHAM ADITYAN RNI NO.TNBIL / 013 / 48725